# நாவல் பழம்

ராசீயின் நாவல்கள் ஒரு விமர்சனம்



கவிஞர். நா. காமராசன்

# நாவல் பழம்

## ராசீயின் நாவல்கள்

ஒரு விமர்சனம்

கவிஞர். நா. காமராசன்

அணியகம்
சென்னை-30

வெளியீடு — 14—1—78
பொங்கல் நாள்
உரிமை பதிப்பகத்துக்கு :

விலை ரூ. 5-00

கிடைக்குமிடம்

1. அணியகம் (தொலைபேசி 611230)
   22, செல்லம்மாள் தெரு,
   சென்னை–30
2. பாரி நிலையம் சென்னை–1.
3. சைவசித்தாந்த கழகம்,
   சென்னை–1

பிற நூல்கள்

| | |
|---|---|
| கிறுக்கல்கள் (நா. காமராசன்) | 5-00 |
| காமராசன் கவிதைகள் ஒரு புதிய சகாப்தம் | 4–00 |
| காமராசன் கவிதைகள் ஒரு திறனய்வு | 4–00 |

மெட்ரோ பிரிண்டர்ஸ் & பேக்கேஜிங் இண்டஸ்டிரி
சென்னை–600 029.

# புதிய பாதை

எவ்வளவு உயர்ந்த நாவலாக இருந்தாலும் அது விமரிசிக்கப்படவில்லை என்றால் அது வெற்றி பெறுவது இல்லை. அசுர வேகத்தோடு பத்திரிகைத் தொடர் கதைகளாக வெளி வரும் நாவல்கள் வாசகர்களைத் திருப்திப் படுத்துகின்றன; அவர்கள் விமரிசிக்கிறார்கள். ஒரு சில நாவல்கள் பத்திரிகைத் தொடர்கதைகளாக வருவதில்லை. அவை இலக்கியங்களாக உருப் பெறுகின்றன. தமிழ்க் காவியங்களைப் போல விமரிசிக்கத் தக்கவை. அத்தகைய நாவல்கள் இங்கே ஒரு கவிஞரால் விமரிசிக்கப் படுகின்றன. அதுவே நாவல்பழம். விமரிசனத்தில் இது ஒரு புதிய பாதையை வகுத்துத் தருகிறது.



கவிஞர். நா. காமராசன்

# நாவல் பழம்!

## ராசீயின் நாவல்கள்

ஒரு விமர்சனம்

**நா. காமராசன்**

கடுக்கன்களைப் போன்ற பொன்நிறப் பூக்கள் காற்றிலே இலையெல்லாம் செவியாக மாறிக் காது குத்திக் கொண்டது போல் பூச்சுமையில் கனவுகளை அபிநயிக்கும் ஒரு புளி மரத்தோப்பு,

எனது "தேவதேவி"யின் ஊருக்கு முன்னிடத்தில் மிகப் பெரிய ஒரு காலனியை உருவாக்கத் 'தேவையான நிலப் பரப்பில் நான் ஒரு நாவல் பழக்காரியோடு பேரம் பேசிக் கொண்டிருந்தேன். விலை திகையவில்லை. இயற்கை அரசியை ரசிக்கும் வெறியில் விழிகள் திசைகளைத் துருவு கின்றன. தோப்பு முழுவதும் அடிக்கு ஒரு புளியமரம்.

பந்தல் போட்டமாதிரி சுகமான நிழல். வெண் மணல் பரப்பு! அந்தத் தோப்பையும், மணல் பரப்பையும் பார்த்து லயித்த கவிதைக் கிறுகிறுப்பில் "இங்கே ஒரு பாலைவனம் இளைப்பாறிக் கொண்டிருக்கிறது" என்று மனம் முணுமுணுக்கிறது. கையிலே ஒரு நாவல் புத்தகம் இருக்கிறது. கூப்பிடு தூரத்தில், அந்த மௌன வெளியின் கதவுகளைத் தட்டுவது போல் யார்வீட்டு மாட்டுக்கோலாடம் அடிக்கிறார்கள்.

தோப்பின் கடைசி மூலையில்...மணல் மேட்டிற்கு அருகிலுள்ள கூட்டு மரங்களின் நிழலில் அமர்ந்து கொள்கிறேன்.

மௌனம் என்பது சில நேரங்களில் கம்பீரம் பெறும் போது...மனித உடலுக்கு இதயம் கிரீடம் ஆகிற இலக்கிய சாம்ராஜ்யம் உருவாகி விடுகிறது. ஓசைகள் அங்கே எழுவதில்லை. ஆனால் உதடுகளில் வார்த்தைகள் தாமாகவே வந்து ஒட்டிக் கொள்கின்றன. பௌர்ணமி ராத்திரியில் படகுகளும், மனிதர்களும் அற்ற தேவ வேளையில் உருவாகும், அமைதியான சலனம் காட்டும் கடல் அலை

களைப் போல...தனிமையில் அந்த நாவல் புத்தகத்தில் என் உணர்வுகள் புரள்கின்றன.

எங்கள் ஊர்க் குளம்.

பரந்த புல்வெளி. இடையிடையே ஓடைகள் இருக்கும். கருவேல மரங்கள் இருபுறமும் சுற்றி உயர்ந்து பின்னிப் படர்ந்து ஓடைக் கரைகளை மணல் வீடுகளாக மாற்றும் கோலங்கள்! கசடறக் 'கற்பதற்காக' ஒரு வகுப்பில் பல வருடம் தங்கும் முதிர்ந்த மாணவர்கள் பீடிகுடிக்கக் கரு வேல மர முள்களில் குத்தி வைத்து விட்டுப் போன "தீப் பெட்டிப் பிசிறுகள்" ஓடையில் தண்ணீர் வராவிட்டால், நிழலிலே கூடக் குளிக்கலாம் எனத் திகைக்க வைக்கும் அளவு மனத்திற்குள் மயக்க நீச்சல். நாவல் நூல் என் கையில் இருக்கும். யாரோ ஒரு பிரியமான ஊமைக் காதலியை நிர்வாணமாக்கி, தெய்வீகமாக ரசிப்பதைப் போல, துளும்பும் மௌனத்தோடு பக்கம் பக்கமாகப் புரட்டுவேன். ஓ ..அது ஒரு தனிமையில்லாத தனிமை அல்லவா?

எப்போதும் மணலாகவே இருக்கும். தூரத்துப் பார்வைக்கு மணலைக்கயிறாகத் திரித்ததுபோல் தோற்றம்

காட்டி எப்போதாவது தண்ணீர் வரும் வைகை நதிக்கரைக் கோவிலைத் தாண்டிப் போனால்... "ஒரு மரமே" தோப்பானது போல ஒரு பெரிய ஆலமரம். கீழே நிழலில் மயங்கும் மணல்வெளி. முதல் காதலின் போதைத் தனமான குறும்புகளை—யாருமற்ற தனிமையில் நினைவுகளில் தரிசிப்பதைப்போல...ஏதோ ஒரு நாவலுடன் நான் அமர்ந்திருப்பேன். அப்போது பறவைகள் தலையில் எச்சமிட்டாலும், எழுத்துப் பன்னீர்ப் பூக்கள் இதயத்தில் உதிர்கிற மௌனத்தில் சங்கமிப்பேன்.

எங்கள் ஊருக்கே ஒரு பெரிய கொசு வலையாகப் போடவேண்டும் என்று நான் அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு.

எங்கள் பக்கத்தில் பகலில் கிடைக்கும் மருந்து போன்ற சாப்பாட்டையும், இரவில் கிடைக்கும் கொசுக் கடியையும் நினைத்துக் கொண்டு "நாங்கள் பகலெல்லாம் மருந்து சாப்பிடுகிறோம். இரவெல்லாம் ஊசிபோட்டுக் கொள்கிறோம்" என்று ஒரு கவிஞன் எழுதினான்.

அந்த மாணவப் பருவத்தில் அப்பாவின் மெத்தை போடப்பட்ட கொசுவலைக் கட்டிலில்...அந்தக் கால கட்டத்தில் சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் விசிறி இழுக்கும் ஆளைப்போல...மரப்பலகையில் பட்டுத் துணி வைத்துத் தைக்கப்பட்டு, கயிறுகட்டி, கட்டிலின் மேற்கூரையில் உருளைகளில் பிணைக்கப்பட்ட விசறியை இடது கையால் இழுத்தபடி ஓய்வு கொள்ளும் நேரங்களில் சுய மரியாதை இயக்கவாதிகள், கம்யூனிஸ்டுகள் ஆகிய எனது இரண்டு கண்களைப் போன்ற நண்பர்கள் "இரு துருவம்" நாவலைத் தந்த போது அவர்களை உடனே அனுப்பிவிட்டு, நான் அவர்களின் உடனிருப்பிலிருந்து அகன்று வேறொரு துருவமாகி...அந்த நாவலை மௌனமாகப் படித்திருக்கிறேன். அப்போதெல்லாம் அந்த எழுத்துக்களில்...எனது விழிப்பின் கனவுகளில் நான் உறைந்துபோய்விடுவேன்.

நினைக்கும்போது மிக்வும் வியப்பாகவே இருக்கிறது. கதை கேட்கும் பருவமும், கதை படிக்கும் பருவமும் முற்றுகவே வேறுபடும் காலமுரண்பாடு சுவையாகவும் இருக்கிறது.

"ஆஸ்திக்கு ஒரு ஆண்பிள்ளை...ஆசைக்கு ஒரு பெண் பிள்ளை" என்பது பழமொழி. "அதிகச் செலவு செய்து ஆஸ்தியை அழிக்க ஒரு ஆண்பிள்ளை. யாரையாவது காதலித்துப் பெற்றோரின் ஆசையை அழிக்க ஒரு பெண் பிள்ளை" இது புதிய வாழ்க்கை வழி. ஆனால் நான் ஒரே பிள்ளை, எங்கள் உறவினர்கள் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த காலம்...பெரியவர்கள் கிணற்றின் பாடலைப் போல வெளிவரும் இறவைச் சத்தத்தில் வேர்வை சிந்தி வயல்வெளியில் உழைத்துவிட்டு வீட்டுக்கு வருவார்கள். மொத்தமாக இலைபோட்டு உட்கார வைத்து எல்லாக் குழந்தைகளுக்கும் உணவு படைக்கும் தாயைப் போல பூமித்தாயின் ஒவ்வொரு இடமாக மாறி மாறி வீட்டின் முன்னிடம் முழுவதும் நனையும் வரை ஓடிக் கொண்டே குளிப்பார்கள்.

அந்த இரவு நேரங்கள் மிகமிக இனிமையானவை. அதுவும் நிலாக்காலத்து இரவென்றால் எங்களுக்கு இரட்டைச் சந்தோஷம்.

அல்வாவைப்போலக் கிண்டப்பட்ட கேழ்வரகுக் களி வடைச்சட்டியில் முறுகலான மணத்தோடு வரும் "குச்சிக்

கருவாட்டின்“ நறுமணம் (அப்போதெல்லாம் எங்களுக்கு ரோஜாப்பூவின் மணத்தைவிடக் கருவாட்டின் மணமே பிரியமூட்டும்.) இவைகளைச் சுவைத்துவிட்டு, ராஜா வீட்டுக் கல்யாணத்திற்குப் பூசணிக்காய் பறிக்கும் விளையாட்டில் சிறிது நேரம் சுவை கண்டோம். களத்து முற்றத்தில் பூவரச மரங்கள், ஒரு வேப்ப மரம்... களத்திற்கென்றே கட்டப்பட்ட நான்கு சுவர்கள்... இரண்டு களத்து வீடுகள் ...அங்கே பாட்டி கதை சொல்வாள்.

இறந்தவர்களின் உருவத்தை வரைந்து பூவைத்து விளக்கேற்றும் அந்தத் தரையில் பாட்டி சொன்ன கதையைக் கேட்ட போது... இடையிடையே கேட்கும் எங்கள் இரைச்சலை அடக்கவே அவள் மிகவும் சிரமப்படுவாள். மானுக்கும் மான்தோல்மேல் தவமியற்றும் துறவிக்கும் ஒரு மனநிலை வரமுடியாது. அதுபோலத்தானே கதை கேட்கும் மனநிலையும், கதை படிக்கும் மனநிலையும்?

நாங்கள் வளர்ந்த பிறகு ஊர்ச்சாவடி அரசமரத்தில் சிரிப்பூட்டும் கதைகளையும், பேய்க்கதைகளையும் ஒரு நண்பர் சொல்வார். குளவிக் கூடுகள் நிறைந்த அவரு

டைய வீட்டு மாடியில் அனைவரும் உறங்கப் போவதற்கு முன் நிலாவெளிச்சத்தில் அரசமரச் சிமெண்டுத் திண்ணையில் பெண்கள் அரசமரத்தைச் சுற்றுவதைப் போல நாங்கள் அந்த நண்பரைச் சுற்றுவோம்.

சப்த ஜாலங்கள்——பொழுது போக்கு———மௌனமற்ற வெறும் பேச்சுகள் அன்று!

டால்ஸ்டாயின் அன்னா கரீனாவைப் படித்தபிறகு, ஒரு மிகப் பெரிய மாற்றம் என்னுள் நிகழ்ந்தது. நாவல்களை பக்தர்கள் 'இருமுடி' சுமப்பதுபோல் சுமந்துகொண்டு தனி இடங்களைத் தேடிப் பிடித்து நானும் ஒரு வாசகன் ஆனேன்.

சிறுகதை படிப்பது ஞாயிற்றுக்கிழமைச் சோம்பேறிகளின் வேலை. கவிதைகள் பிறர் நம்மை மேதாவியாகக் கருத...கூட்டத்தில் மேற்கோள் காட்டப் படிக்கப்படுகின்றன. (தமிழகத்தைப் பொறுத்தவரை இது அதிகம்.)

சிலருடைய நல்ல சிறு கதைகளைப் படித்தபோது கூட... அது வாழ்வின் ஒரு உதிரும் மலராகவே இருந்தது. ஆனால் நாவல்களில் மாந்தோப்பு நிழலின் சுகம் கிடைத்தது.

கல்லூரியில் படித்தபோது மேல்மாடி நூலகத்தில் பிற மொழி நாவல்களை ஏராளமாகப் படித்த பிறகு நான் வெட்கித் தலை குனிந்தேன். தகழியின் "செம்மீன்", தாராசங்கர் பானர்ஜியின் "கணதேவதா" ஆகிய நாவல்களைப் படித்த பிறகு தமிழில் நாவலாசிரியர்கள் இருக்கிறார்களா? என்ற கடுமையான சந்தேகம் ஏற்பட்டது.

கல்கியின் சரித்திர நாவல்கள் ஏகாதசி விரதத்திற்குப் பயன் படலாம், சில சுகமான வார்த்தைகள்——ஆனால் அடிமைச் சமூக அமைப்பை இந்த தேசத்தில் உருவாக்கிய ராஜ ராஜன் போன்ற மன்னர் பரம்பரையின் புகழ் பாடும் அந்த நாவல்களைச் சுதந்திரப் போராட்ட கால கட்டத்தில் எழுதினால் இவர்களைப் பற்றி என்ன சொல்வது?

''இவர்கள் மான்களோடு சேர்ந்து
கொண்டும் ஓடுகிறார்கள்
நாய்களோடு சேர்ந்து கொண்டும்
வேட்டையாடுகிறார்கள்''

தி. ஜானகிராமன் ''நாவல் இலக்கியத்தின் பிரும்மா'' என்பதை நிரூபிக்கும் ஒரு காலகட்டம் நடந்து கொண்டிருந்ததை யாரும் எளிதில் மறுக்கமுடியாது. மிகச் சிறந்த பேச்சாளரும், புரட்சிக்காரருமான கே. பால தண்டாயுதம் மதுரையில் அப்போது பேசினார். ''நான் ஜன்னல் அருகே உட்கார்ந்திருக்கிறேன்'' என்கிற ஜெய காந்தனின் கதையைக் குறிப்பிட்டு விட்டு...அந்த ஜெய காந்தனே ''ஜானகிராமனிடம் எனக்குப் பயம்'' என்று சொன்னதாகவும் கூறினார்.

''மோக முள்'' ஒன்றுதான் தமிழிலுள்ள நாவல் என்று விமர்சிக்கப்பட்டது. அந்த நாவல் ''இதற்காகத்தானா என்னை இத்தனை நாள் சுற்றினாய்'' என்று கதாநாயகனை விட வயதான கதாநாயகி கேட்கும் முக்கால் பகுதியில்

முடிந்திருந்தால் முற்றுகவே ஒரு நல்ல நாவலாகவே இருந்திருக்கும்.

அவருடைய "அம்மா வந்தாள்" வெற்றி பெற்ற நாவல். ஆனுல்... அதற்குப் பிறகு அவரைக் காண முடியவில்லை! காவிரி நதியாகும் பிரவாகம் எடுத்தவர் கரையோரத்துப் பட்டமரமாக நின்றுவிட்டார்.

டாக்டர் மு. வ. காண்டேகரைப் பின்பற்றி எழுதினுர். அவர் ஒரு நல்ல புத்தக வியாபாரி. ஆனுல் எழுத்தாளர் அல்ல. ஒரு புத்தகத்தில் 395 மேற்கோள்களைத் திருடித் தனது சிந்தனையாக மாற்றியிருக்கிறுர்.

சிறுகதைத் துறையில் ஒரு சகாப்தத்தை உண்டாக்கிய ஜெயகாந்தன் "ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம்" என்ற ஒரே ஒரு (முடியாத) நாவலைத்தான் நன்ருக எழுதியிருக்கிறுர்.

அசோகமித்திரனின் முத்திரையும் சிறுகதைகளிலேயே மின்னுகின்றன. அவருயை "தண்ணீர்" நாவல் ஒரு இலக்கியப் பாலைவனம்,

அகிலன் எழுதியுள்ள நாவல்களில் "பாவை விளக்கு" ஒன்றுதான் வெற்றிப் படைப்பு! செல்வராஜியின் "மலரும் சருகும்" நம்பிக்கை ஊட்டியது. பிறகு அவர் சருகாகப் போய்விட்டர்.

இந்துமதியின் "தரையில் இறங்கும் விமானங்கள்" நல்ல நாவல்——ஆனல் பிறகு அவருடைய இலக்கிய விமானம் தரையில் இறங்கிவிட்டது. சுந்தரராமசாமியின் "ஒரு புளியமரத்தின் கதை" சொற்பிரயோகம், உத்தி, கிண்டல் ஆகிய பல சிறப்புக்களைக் கொண்டது. ஆனல் அதற்குப் பிறகு அவர் கருகிப் போய்விட்டார்.

"சாண்டில்யன்" போன்றவர்கள் எழுதும் நாவல் கள்——எழுத்தாளனுக்கு அவன் எழுதிய புத்தக அளவை வைத்து எடைக்கு எடை ஏதாவது தரும் நிலை ஏற்பட்டால் சத்தியமாக அவர்களது சந்ததி முழுவதையும் வாழ வைக்கும். கோவி. மணிசேகரன் 'தென்னங்கீற்று' குறு நாவல் ஒன்றில்தான் கலை அலைவீச்சைக் காட்டுகிருர்.

ராஜம்—கிருஷ்ணன் மிகத் துணிச்சலான பணியில் ஈடுபட்டுள்ளார். பல்வேறு பகுதிகட்குச் சென்று அப்பகுதி

மக்களின் வாழ்வை எழுதியிருக்கிறார். சம்பல் கொள்ளைக் காரர்களைப் பற்றி "முள்ளும் மலர்ந்தது" என்ற படைப்பை வழங்கியுள்ளார். ஆனால் அவருடைய நடை மு. வ——வைப் போலக் கட்டுரைத் தன்மை கொண்டதாக மாறிவிடுகிறது.

நா, பார்த்தசாரதியின் நடை மிக அழகாகக் குறிஞ்சி மலர் பொன் விலங்கு இவைகளில் கைக்கொடுக்கிறது. ஆனால் அவரது பிற நாவல்களில் அதீதமான கற்பனை இலக்கியச் செழிப்பை வாடச் செய்துவிடுகிறது.

எல்லா நாவல்களிலும் கதாநாயகன் மூன்றுமுறை குளிப்பான். அவன் கால்கள் பவளமல்லிகைபோல் இருக்கும்—— ஏன்? அவன் கடற்கரைக்குப் போவதைக் கூட (சந்திரமண்டலம் சென்றவனையும் மறக்கும்படி) முதன் முதலாக உலகத்திலேயே கடற்கரைக்குச் செல்பவன் அவருடைய கதாநாயகனே எனக்கற்பித்து எழுதுவார்.

"பஞ்சும் பசியும்" எழுதிய ரகுநாதன் "பர்சும் பசியும்" என்று கணக்குப் பார்க்க ஆரம்பித்துவிட்டார். சம்பளப்

பட்டு வாடா ஒழுங்காக நடக்கிறது. "கிடை" குறுநாவலி லும், சிறு கதைத் துறையிலும் சாதனை நிகழ்த்திய கி. ராஜ நாராயணனின் "கோதெல்ல கிராமம்" குறிப்பிடத்தக்க நாவலாகும்! அரிய செய்திகள், அவரது கிராமிய நடை இவைகளை அதில் ரசிக்கமுடிகிறது.

நாகர் கோவில் பக்கம் ஒட்டியிருக்கும் புதிய எழுத் தாளர்கள் எழுதிய எல்லா நாவல்களும் செம்மீனின் நகல் களே

நீல. பத்மநாபனின் தலைமுறை, உறவுகள் இவை சமூகப் பழக்க வழக்கச் சித்தரிப்பில் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் அடங்கிவிடுகின்றன.

லா. சா. ராமாமிர்தம் எழுதிய புத்ர, அபிதா வெற்றிப் படைப்புகளே. அவை நாவல்கள் அல்ல. காவியங்கள். மனம் திறந்து எழுதுகிறேன், "தமிழ் நாட்டில் எங்கள் அனைவரையும் விடச்சிறந்த கவிஞர் லா. ச, ரா——தான்!"

இன்டுமார்க் (48 × 32) கதாசிரியர்கள் பிரபல பத்திரிகை கள் மூலம் எப்படியாவது விளம்பரமும் பணமும் சேர்க்கப்

பேறு விபச்சாரம் செய்கிற காரியம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆழமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று யாரும் நினைப்பதில்லை. தெரிந்ததை வைத்துக் கொண்டு ஆழம் பார்க்கவே அனைவரும் விரும்புகின்றனர். "காஞ்சி காமகோடி மடாதிபதியின் கண்களில் கன்னிமாரா லைப்ரேரியே இருப்பதாக நம்பிக்கொண்டு "இந்த மக்கள் பூமியைப் பார்க்கும் போது வானத்தைப் பார்ப்பதைப் போல் பார்க்கவேண்டிய பள்ளத்தில் வசிக்கிறார்கள்" என்று சேரி மக்களைப் பற்றி எழுதிய ஜெயகாந்தனே கூட கலசக் கோவிலுக்குக் கைகட்டிச் சேவகம்செய்யும் சித்த பிரமை நிலைக்கு ஆளாகிவிட்டார். "பிரசாதம்" சிறுகதையின் மூலம் புரட்சி செய்த சுந்தர ராமசாமி "கோவில் பிரசாதம் போதும் கோவிந்தா" என்று இலக்கியப் புரட்டாசி பஜனை பாடும்போது சமூக மாறுதலுக்கான போர்க்குணத்தை இளைய தலைமுறையினர் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. மிகப் பெரிய பிரச்சார சாதனமான சினிமாக் கதை உலகம் சில தனிப்பட்ட மனிதர்களின் ஆதிக்கத்தில் இருக்கிறது. சுரதா, கண்ணதாசனைப் போன்ற கவித்துவம் கொண்டவர்கள் கூட அங்கே மதிக்கப்படுவதில்லை. "சில இடங்

களில் சங்கப்புலவர்களிடம் நான் தோற்கிறேன். சில இடங்களில் சங்கப்புலவர்கள் என்னிடம் தோற்கிருர்கள்" என்று கூறிவிட்டுச் சுரதாவைப் போன்றவர்கள் சுய மரியாதையைக் காப்பாற்றிக்கொண்டு வெளியே வந்து விட்டார்கள். வாழ்க்கைத் தேவைக்காக, தாகூரைப் போல எழுதவேண்டிய கண்ணதாசன் தஞ்சை ராமையாதாஸ் போன்று எழுதவேண்டிய இழிநிலே ஏற்பட்டது. நானே ஒரு முறை விமரிசித்தேன். "கண்ணதாசன் இந்தியாவின் ஜனுதிபதியைப் போல சம்பாதிக்கிருர் ஆனல் இந்தியாவைப்போல கடன் வாங்குகிருர்" என்று. இந்தச் சிந்தனே குமுதத்தில் தனது டேட் ஆப் பெர்த்தையே மாற்றிய மாஜி எம். பி—யின் பெயரில் வெளிவந்தது. குமுதத்தின் தரத்திற்கு இது நல்லதல்ல. கேரள திரை உலகத்தில் தோப்பில்பாசி "ஆசான்" என்று அழைக்கப்பட்டு மரியாதை செய்யப்படுகிருர். இங்கே ஆர்மோனியச் சுருதியை ஒழுங்கு பார்க்க வேண்டியவர்கள் கூட அமர கவிஞர்களின் சிந்தனேயைத் திருத்துகிருர்கள். பட்டுக்கோட்டை கூட சாணிப்பிள்ளேயார் முதல் சந்திர மண்டலம் வரை பாடிய பாரதியைப் போல ஒரு குழப்பவாதியாக மாறினர். "தேனுறு பாயுது செங்கதிர் சாயுது ஆனலும் மக்கள் வயிறு காயுது" என்று பாடியவன்,

"தில்லையம்பல நடராஜா, செழுமை நாதனே பரமேசா என்றும் பாடுகிறுன். இங்கே தமிழ் படித்தவர்கள்! தமிழை வைத்துப் பிழைக்கிறுர்கள். மாரியம்மனுக்கும் ஒரு கும்பிடு! மேரியம்மனுக்கும் ஒரு கும்பிடு! என்பது மலின மாக விளம்பரம் பெறக் கிடைத்த வழியாகிவிட்டது. நாவல்களைப் படமாக்கும்போது புதிய கலை நுட்பங்களைத் தான் பார்க்க முடிகிறதே தவிர சமூக மாற்றத்திற்கான சுவடுகளை அங்கே காண முடியவில்லை. அழகு, அறிவு, பணம் இவற்றிற்கு அடிமைப்பட்டு மூளைச் சுரண்டலுக்கு ஆளாகுபவரே இங்கே அதிகம். அதே நேரத்தில் இலங்கை யில் தமிழ் நாவல்கள் வளர்கின்றன என்பதை நாம் மறுப்பதற்கில்லை. முதல் வரிசை விமர்சகர் பேராசிரியர் டாக்டர் கலாநிதி கைலாசி அவர்கள் கூறுவதைப்போல இந்தச் சமூக மாற்றத்திற்கான போர்ப் பிரகடனங்கள் இன்னும் தமிழ் நாவல்களில் இடம் பெறவில்லை.

''செவ்வானம்'' புகழ் கணேசலிங்கன் போன்ற இலங்கை எழுத்தாளர்கள் எழுதுவதைப் போல ஒரு புதிய முயற்சி தமிழில் இப்போதுதான் ஆரம்பமாகி இருக்கிறது. தாமரை போன்ற பொதுவுடைமை இயக்க ஏடுகளில் கருத்துக்கள் மட்டும் இருக்கின்றன. கணையாழி போன்ற புதுமை இலக்கிய ஏடுகளில் கலையம்சம் இருக்கிறது. இந்த இருவருக்கும் அப்பால் ஒழுங்காகத் தமிழும் ஆங்கிலமும் படித்து நேரடியாகவே இந்தச் சமூக மனிதனின் மன அவஸ்தைகளைக் கண்டு வெந்து பேனா பிடித்தவர்கள் கவிதைத் துறையில் முழு வெற்றி பெற்றுவிட்டார்கள். நாவல் துறையில் அந்த முயற்சியை எழுத்தாளர் ராசீ மேற்கொண்டு வெற்றி பெற்றுள்ளார். தெளிவான சமூக விஞ்ஞானப் பார்வை அவருடைய திசை வழியைக் கம்பீர மாக நமக்கு அறிமுகப் படுத்துகிறது. சுரண்டப்படுகிறவன் யார்? சுரண்டுகிறவன் யார் என்பதை வைத்தே சமூகத்தில்

ஒரு மனிதனின் பாத்திரத்தைச் சித்தரிக்கவேண்டும் என்று பிரகடனம் செய்கிறார். சம உரிமை, சமஅந்தஸ்து, சம உடைமை இம்மூன்றும் அடங்கியதுதான் சமதர்மம் என்று சொல்கிறார். சமதர்மம் என்பது "அடியோடு மாற்றம்" என்று தெளிவாக விளக்குகிறார்.

"அரை மனிதன்" என்கிற நாவலில் ஏழை, பணக்கார, மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த மூவரையும் சந்திக்க வைக்கிறார். தத்துவக் குழப்பமின்றி நாவலின் நோக்கத்தை முதலிலேயே சித்தரிக்கிறார். அடிபட்டு ரத்தம் சிந்தும் நொண்டியைப் பற்றிச் சொல்லும்போது"**அந்த இடம் சிவந்த மண் ஆயிற்று**" இந்த நாடும் அப்படி ஆகவேண்டும் என்று அறைகூவிச் செல்கிறார். ரயில்வே நிலையத்தில் கூலி வேலை செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பற்றிய கதை இது. ஆசிரியர் அவர்களை உதிரிகள் என அழைக்கிறார்.

அந்த உதிரிப் பூக்கள் வாடுவதற்கு முன்னுல் நாராகிப் போய்விட்ட அவர்களின் வாழ்க்கையிலே அவர்கள் பூவாகத் தொடுக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்ருர். தேர்தல் முறைகள் இருக்கின்றவரை— ஜனநாயகம் இருக்கின்றவரை பிரச்சினைகளைப் பற்றிப் பரிசீலிக்கலாம்; ஆனுல் பிரச்சனையில்லாத வாழ்க்கையை மக்களுக்குப் பரிசளிக்க முடியாது என்று வாதாடுகின்ருர். அம்மாக்கண்ணு என்கிற பெண் பாத்திரம் நம்மைக் கவரு கிறது. ஆசிரியரிடமுள்ள தனிச் சிறப்பு நகைச்சுவை நடையழகு! இந்தியாவில் அவசரநிலை பிரகடனப்படுத்தப் பட்டபோது பொதுக் கூட்டத்தில் பேச வாய்ப்பே கிடைக் காத பேச்சாளன் தன் மனைவியின் கழுத்தை "மைக்" என்று நினைத்துப் பிடித்துக் கொண்டு "தலைவர் அவர்களே! தாய்க் குலமே!" என்று பேச ஆரம்பித்துவிடுகிருன். இது புது நாவலாசிரியர் ராசீ அவர்கள் எழுதிய ஒரு ஓரங்க

நாடகத்தில் வரும் காட்சி. நகைச்சுவையை உயர்ந்த போர்க் குணத்திற்கு இவர் பயன்படுத்தும்போது நாகண வாய்ப் பறவை மட்டுமே சிரித்த தமிழ்இலக்கியத்தைப் படித்துவிட்டு நாங்களும் சிரிக்கிறோம் சிந்திப்பதற்காக!

தமிழ் நாட்டில் போர்கள் அற்ற ஒற்றுமை மலர்ந்து மூவேந்தர்களும் ஒன்றுகும் ஏகாதிபத்தியத்தின் பொற் காலத்திற்காக (எந்த மன்னனையும் மக்களாட்சித் தலைவ ராக நான் ஏற்க மாட்டேன்) இளங்கோவடிகள் சிலப்பதி காரம் எழுதினர். ராசீ அவர்கள் உழைப்பாளி, முதலாளி, மத்தியவர்க்க உதிரிகள் ஆகிய மூவரும் மனித கம்பீரம் பெறும் சோசலிசப் பொற் காலத்திற்காகத் தனது நாவல் களைப் படைக்கிறார்.

புதுமைப் பித்தன் கூட கணவனைக் காப்பாற்ற, சோரம் போகிற ஒரு பெண்ணைப் பார்த்து விட்டு "கற்பு!

கற்பு! என்று கதைக்கிறீர்களே! இதுதானய்யா பொன்ன கரம்'' என்று பிரச்சினைக்குத் தீர்வு சொல்லாமல் கூச்சல் போட்டுவிட்டுப் போய்விடுகிறன்! அந்தக் கூச்சலை ''சமூகத்தின் நெஞ்சத்திலே எறியப்பட்ட வேல்'' என்று புரட்சி எழுத்தாளர்கள் வர்ணிக்கிறர்கள். ஆனல் ராசீ அவர்களோ அந்த வேல் வீச்சிலே புண்பட்ட சமூக நெஞ்சிற்கு மருந்து போடுகிறர். அதே ஏழைகளைப் பற்றிப் ''போருக்குப் போகாமலே பட்டினிப் பட்டாளம்'' எனக் குறிப்பிடுகிறர். அந்தப் பட்டினி பட்டாளத்தின் மூலம் ''வசதியிருக்கிறவன் தரமாட்டான் — அவனை வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்'' என்ற முழக்கத்தை தூசக மாய் எழுப்பி ஏழைகளின் பிரச்சனை தீரும் இடம் சோசலிச பூமியே என்கிறர். வெறும் கதாசிரியன் என்கிற எல்லைக் கொடுகளையும் தாண்டிச் சமூக விஞ்ஞானச்சிந்தனையாளன் என்ற சத்திய ஆவேசத்தோடு விளக்குகிறர். ஏழைக்குப்

புதுச் செருப்பு வேண்டும் என்று எழுதி விட்டு அதே பேனாவால் "மனைவி மயக்கத்தை" புதுச் செருப்பு கடிக்கு மென்று இலக்கியம் ஆக்காமல் புதுமைபித்தன், ஜெய காந்தன் இவர்கள் சிறு கதையில் பெற்ற வெற்றியை நாவ லில் விசுவருபம் எடுக்க வைக்கிறார். புதுமைப்பித்தனிடம் முதல் தரமான கதை உருவம் உண்டு. ஜெய காந்தனின் பாத்திரங்கள் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கும் கிளிப் பிள்ளைகளாகவே இருக்கிறார்கள். ஆனால் ராசீயின் நாவல் களில் அவருடைய சிந்தனைகளே பாத்திரங்களாக மாறு கின்றன. **சோசலிச சமூக அமைப்பு என்கிற கொள்கை இலக் கிய மாகிறது.** ஜெயகாந்தன் போன்றவர்கள் தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லத் துடித்து அரை வேக் காட்டு இலக்கியம் படைக்கிறார்கள். ஆனால் ராசீ சமூகத் தற்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி அழியாத இலக் கியச் சிந்தனை இயக்கம் ஒன்றைப் படைக்கிறார்.

நொண்டி ஒருவனை நாவலின் கதாநாயகன் ஆக்கு வதன் மூலம் இந்தச் சமூகமே ஊனமுற்றிருப்பதை உருவ கப்படுத்துகிறார். "நான் பிச்சையெடுத்தால் என்னைக் கேவலம் ஒரு பள்ளிக்கூடத்து நிர்வாகி என்று சொன்னா லும் சொல்வார்கள். அதனால் நான் பிச்சை மட்டும் எடுப்பதில்லை" என்று நொண்டி கூறும் இடம் இன்றைய வாழ்காலத்தைத் துணிச்சலோடு விமரிசிக்கும் Satire ஆகிறது. அபின் மயக்கத்திலே ஒரு காலத்தில் உறங் கிய சீனாவைப்போல விளம்பர மயக்கத்திலே இப்போது இயங்கிக்கொண்டிருக்கிற நாடு இது. அந்த விளம்பரங் களே எவ்வளவு முரண்பாடான மனிதர்கள் இங்கே வாழ் கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. இதோ நம் புது நாவலாசிரியர் அதை விளக்குகிறார். "ஒரு ரூபாய் கட்டினால் ஒரு லட்சம் வரும்" இப்படி ஒரு பக்கம் விளம் பரம். மற்றொரு பக்கம் "கடின உழைப்புக்கு ஈடு எதுவு

மில்லை" என்ற விளம்பரம். சுகாதாரம் சோறு போடும் என்று இருமிக்கொண்டே பாடம் நடத்தும் ஆசிரியர் ஆரோக்கியசாமிக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? இவ்வளவு நுட்பமான நையாண்டிகளைக் கையாளும் ஆசிரியர் நெஞ்சைப் பிழியும் சோக வார்த்தைகளை எழுதும் போது கவித்துவ கம்பீரம் பெறுகிருர். நொண்டி தனது சோக வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும் ஒரு இடம்! அவன் நொண்டியாக இருப்பதனுலே அவன் மேல் பல பேர் இரக்கம் காட்டுகிருர்கள். அவன் உள்ளம் இப்படிச் சொல்கிறது. "அதிர்ஷ்டத்தையும் நம்பி வாழவேண்டும்; உழைப்பையும் நம்பி வாழவேண்டும்; ஆனுல் என்னைப் பொறுத்தவரை துரதிஷ்டத்தை நம்பி நான் வாழ்கிறேன்". இதைப் படிக்கும்போது பிழைக்க வழியின்றி எத்தனையோ பச்சைக் குழந்தைகளை ஊனப்படுத்தி காயத்திற்குக் காசு வசூலிக்கும் ஏழைப் பிச்சைக்காரிகளை எண்ணிப் பார்க்கி

றோம்! கண்ணீரே கங்கை நதியாக மாறிவிடுகிறது. பிரிட்டீஷ் ஆட்சியில் ஒரு குதிரையை அடித்த இந்திய வேலைக்காரன் தூக்கில் போடப்பட்டான். ஆனால் ஒரு இந்தியனை உதைத்த குதிரையின் கால்களுக்கு மருந்து போடப்பட்டது. வசதியுள்ளவர்கள் செய்கின்ற தவறுகள் கூட தர்மங்கள் ஆகின்றன. வாழ்க்கையின் அடித்தளத்தில் இருக்கின்றவர்கள் கடைப்பிடிக்கின்ற தர்மங்கள் கூட தவறுகள் ஆகின்றன. எனவே ராசீ தேவைக்கேற்ற தவறு நியாயம்தான் என்று புரட்சிக் குரல் கொடுக்கிறார். தேவைக்குமேல் வைத்திருப்பவன் தானே திருடன். தேவையைக் கேட்கிறவன் எப்படித் திருடன் ஆகமுடியும்? ஆப்பிரிக்க நாட்டுத் தலைவன் ஜோமோ நகன்யாட்டா வெள்ளைக்காரர்களைப் பார்த்து மிகப்பெரிய அறைகூவல் ஒன்றைவிட்டார். நாங்கள் பேச்சு வார்த்தை நடத்திப் பிரச்சனைகளைத் தீர்க்க விரும்புகிறோம். ஆனால்

எங்கள் இளைஞர்கள் உங்களைப் பேசமுடியாத பிணமாக்கி ஆப்பிரிக்காவின் இருண்ட பிரச்சனைகளை ஒரு நொடியில் தீர்த்துவிடுவார்கள். அதற்குள்ளாக நீங்களே திருந்திவிடுங்கள். கும்பிக்கு ஏதாவது கொடடா என்கிற குரல் மதிக்கப்படாவிட்டால் கொலைவாளினை எடடா என்கிற குமுறல் சமதர்ம போர்க்களத்தை உருவாக்கியே தீரும் என்று காலக் குரல் கொடுக்கிறார். இவர் ஜெயகாந்தனைப் போல குறைப் பிறவிகளுக்காக வருத்தப்படவில்லை. புதுமைப் பித்தனை போல சுப்பையா பிள்ளையின் காதலுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றவில்லை. இந்தச் சமூகத்தில் நடைபெறும் போராட்டங்களை மட்டும் சித்தரிக்கவில்லை. இதை அடியோடு மாற்றுகின்ற போராட்டத்தை உருவாக்குவதற்கு எழுத்தைப் பகைப் புலமாக்கி லட்சிய தாகத்தோடு பேனா பிடிக்கிறார். இத்தகைய கடுமையான பிரச்சனைகளைப் பற்றி எழுதுகிற

போதுகூட கலைஞன் இலக்கிய மயக்கத்தை உருவாக்கி விடுகிறான். இழவு வீடுகளில் இசையும் கூத்தும் நடத்தும் ஏழைக் கொட்டிக்காரன்கூட இரவெல்லாம் தூங்குவது போல் மயங்கும் இதயத்தைத் தாலாட்டுகிறான். கடுமை யான பிரச்சனைக் கதையொன்றை சொல்ல வந்த ராசீ ஜயதேவரின் கீத கோவிந்தத்திற்கு இணையான கற்பனை ஒன்றைத் தருகிறார்—இரவிலே ராதை கண்ணனைத் தேடிச் செல்கிறாள். தோழிப் பெண் அவளைத் தடுக்கிறாள். இது இரவு நேரம் தானே என்று ராதா கெஞ்சுகிறாள்.

"இது இரவு தான்! ஆனால் நீ மின்னல் அல்லவா ராதா?" என்கிறாள் தோழி.—ராசீ அவர்கள் அழுக்குப் படிந்த வக்கரித்துப்போன நாடோடித் தன்மையுள்ள படிக்காத பாமரன் ஒருவனிடம் இதைவிட உயர்ந்த சிந்தனையை உருவாக்கிக் காட்டுகிறார். அடி வாங்கிக்

கொண்டு வருகிருன் ஒருவன். நண்பன் அவனைச் சந்திக்கிருன். சம்பாசனை வளர்கிறது.

“என்னப்பா! இன்னைக்கு உன் கன்னம்”

“புளிச்சுப் போச்சு”

“அது சரி உன் கன்னத்தை யார் இனிக்க வைக்கப் போகிருர்கள்? கல்யாண ஆசைகள் தாலி கட்டப்படும் வரை கவிதைகள்தான். அதற்குப் பிறகு நீங்கள் விரும்புகிற சாகாவரம் பெற்ற நாவல் கதாநாயகிகளே உயிர் பெற்று வந்து உங்களுக்கு மாலையிட்டாலும் சத்தியமாய்ச் சாணிக் கூடைதான் சுமக்கவேண்டும். எனவேதான் நமது ஆசிரியர் தான் பார்த்த வாழ்க்கையை அப்படியே சித்தரித்து அதைவிட சிறந்த சோசலிஸ வாழ்க்கைக்காக எழுத்துப் போராட்டம் நடத்துகிருர். அம்மாகண்ணுவைப் பல பேர் “மே” என்ற

ழைப்பதை அவர்கள் அவளை ஆடு மேய்க்கிறார்கள் என்று சொல்லும்போது நகைச்சுவையின் தாக்குதல் எவ்வளவு ஆழமானது என்பது புரிகிறது. உதடுகளைச் சிரிக்க வைத்து விட்டு உள்ளத்தை அழ வைக்கும் இந்தச் சமூக மனிதர் களின் புறவேஷங்கள் நம்மைத் தலைகுனிய வைக்கின்றன. ஒவ்வொரு நிமிடமும் அவமானத்தோடு போராடிக் கொண்டு எப்படியோ வாழ்கிற ஏழைகள் நம்மை அழ வைக்கிறார்கள். இந்த முதலாளித்துவ சமூகம் ஏழைகளை அவமதிப்பதற்காகவே தனது முரசை ஒலிக்கிறது என்னும் உணர்ச்சிப் பிரவாகம் ஏற்படுகிறது. "The blow has come a drum of insult sounded" என்று மகாகவி தாகூர் நம் இதயத்திற்குள்ளே வந்து புலம்பும் குரல் கேட்கிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படாதவரை பொருள்களே சமூகத்தை இயக்க முடியும். கண்ணகியின் சிலம்பு சிலப்பதிகாரத்தை உருவாக்குகிறது. அரை

மனிதனில் ஒரு நெக்லஸ் மனித ஆசைகளை இனம் காட்டுகிறது. ஆனால் ஆசிரியர் ஒவ்வொரு பிரச்சனைக்கும் நளினமான முறையில் தீர்வு சொல்கிறார். சுமைதாங்கியாக அறிமுகப்படுத்தப்படுகிற ஒருவனிடம் கடைசியில் குடும்பச் சுமைதாங்கி என்று தன்னைப் பிரகடனப்படுத்துகிற இழையோட்டம் அறுபடாத இலக்கிய நயமாக இதில் இருக்கிறது. வாசகர்கள் கூர்ந்து படித்தால் திருடனை அவன் வழியில் போகவிட்டுச் சரியான நேரத்தில் பிடிக்கும் காவல் அதிகாரியைப் போலப் பிரச்சனைகளைக் கதையோடு ஓடவிட்டுத் தேவையான இடங்களில் கலையழகு கெடாத தீர்ப்பினைச் சொல்லும் புது நாவலாசிரியர் ராசீ என்பதைப் புரிந்துகொள்வார்கள்!

ஆனந்த விகடன், குமுதம், பாலச்சந்தர் படம் இப்படி இன்றைய வாழ் காலத்தின் கலை உருவங்களைத்

துணிச்சலோடு எடுத்தாண்டு கலித்தொகைக்கு ஜிந்தா பாத் சொல்லாமல் இன்றின் கதையை எழுதுபவர் ராசீ. நாவலின் முதல் வரி வசந்தத்தின் முதல் மலரைப் போல இருக்கவேண்டும் "என்று விமர்சகர்கள் சொல்வார்கள்.

டால்ஸ்டாய் எழுதிய அன்னகரினு நாவலின் முதல் வரிகள் போல ராசீயின் நாவல்களில் மச்சினிக்கு முதல் முதலாக வரும் கள்ளமில்லாத வெட்கத்தைப் போன்ற எளிய இனிய வார்த்தைகள் விடிவெள்ளி அழகு காட்டு கின்றன. ஆசிரியர் கம்பனுக்கு இணையாக இந்த உத்தி யைக் கையாளுகிறார். "கண்டேன் சீதையை" என்று சொல்லுவதைப் போல "நான் அன்று திரைப்படம் பார்க்கப் போயிருந்தேன்" என்று பளிச்சென்று "நன வோட்டங்கள்" நாவலைத் தொடங்குகிறார் "சில நேரங்களில் சில மனிதர்கள்" கதையில் நடிகை லட்சுமி பரிசு பெற்ற

தைக் கூட சித்தரிக்கிருர். ராஜாஜியின் திக்கற்ற பார்வதி யிலேயே அந்தச் சிறப்பு எனது பாணியில் சொன்ஞல் "காதல் தோல்வியடைந்த அந்தச் வீனஸ் தேவதைக்கு" கிடைத்திருக்க வேண்டும். அதை ஆசிரியரும் கூறுகிருர், ராஜாஜியின் கதை நீதிக் கதை. அதில் புதுமை இல்லை என்று துணிச்சலோடு கூறுகிருர். கதையின் முடிவு மிகப் பெரிய தவறு எனச்சுட்டிக் காட்டுகிருர், "தவறு செய்கிற வர்கள் அனைவரும் தற்கொலை செய்து கொண்டால் உலகில் ஒருவரும் வாழமுடியாது" என்கிருர். நான் என்ருே படித்த ஒரு கதை நினைவிற்கு வருகிறது. நண்பன் ஒருவன் தற்கொலை செய்து கொள்ளப் போகிருன். இனி யொரு நண்பன் அவனைத் தடுக்கிருன். தடுத்து விட்டு அவன் அருமையான வாதம் ஒன்றைச் சொல்கிருன். "இப்போது தற்கொலை செய்யாமல் திரும்பிஞல் மறுபடி உனக்கு அந்த வாய்ப்புக்கிடைக்க வழியிருக்கிறது.

ஆனால் தற்கொலை செய்த பிறகு நீ வாழ முடியுமா". ராஜாஜியின் முடிவை எதிர்க்கிற இந்தத் துணிச்சல் தமிழ் நாட்டின் முதல் சுதந்திர எழுத்தாளன் புதுமைப் பித்தனை எனக்கு நினைவு படுத்துகிறது. "சாப விமோசனம்" என்று புதுமைப் பித்தன் கதை ஒன்று எழுதினன். ராமாயண வழக்கப்படி கல்லாகச் சமைந்திருந்த அகலிகை கன்னி யாக (?) மாறிச் சிரித்தாள். அவள் ராமனைக் கேட்ட முதல் கேள்வி எங்கே சீதை? என்பது தான். மனத்தை வெருக் கும் பக்குவமற்ற அந்த மதப் பொய்களின் மகாவிஷ்ணு சீதை தனது சந்தேகத்தால் காட்டிலிருக்கும் கதையைச் சொன்னன். உன் மனைவியையே நம்பாத நீ என் கண வனல் நம்பப்படாத எனக்கு எப்படி வரம் கொடுக்கலாம் என்று கேட்டாள். பிறகு அகலிகை மறுபடியும் கல்லா னள். அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்கள் கதை முடிவை மாற்றுமாறு புதுமைப்பித்தனிடம்

கெஞ்சிக் கேட்டார். இலக்கியச் சோதனைக் காரனை அவன் அவரைப் பொருட்படுத்தவே இல்லை. ராசீயிடம் இந்தப் போர்க்குணம் இருக்கிறது. ஆனால் எப்படியோ வேதனைகளின் ஆளுமையில் விரக்தியின் உச்சத்திற்குப் போய்விட்ட புதுமைப்பித்தனிடம் இல்லாத எதிர்கால நம்பிக்கை இவரை முதல்வரிசை நாவலாசிரியர் ஆக்கு கிறது. '.My way is to begin with the beginning என்ற பைரனின் கவிதைவரிகளை இவருடைய பாட்டாளிவர்க்க இலக்கியங்களே சரியாக இனம் காட்டுகின்றன. ஜெய காந்தனிடம் கூச்சல் மேலோங்கி நிற்கிறது. அற்புதமான கதைக் கருவுள்ள விழுதுகள் குறு நாவலில் உருவமும் கலை அம்சமும் பெறவில்லை. ஓங்கூர் சாமியாரைப் பற்றிப் புலம்புகிற புலம்பலை நம்மால் தாங்க முடிவதில்லை. விழுதுகள் விழுதுகளைப் போலக்காற்றில் ஆடாமல் "மாமி வீட்டு ஊஞ்சலாட்டம்" போடுகின்றன. ஆனால்

ராசீ ஒரு சிறுகதைக் குரிய கட்டுக் கோப்பை நாவலில் காட்டுகிருர். யானைத் தந்தத்தில் ஓவியம் தீட்டலாம். ஆனல் இவர் அரிசியில் ஓவியம் தீட்டும் நுட்பக் கலைஞ ராக இருக்கிருர். எந்த இலக்கியமும் காலத்தின் தேவை யைக் கலை அழகோடு சொல்கிற போதுதான் அது உலகச் சரித்திரத்தின் பக்கங்களாக மாறி விடுகிறது. யாருடைய மனத்தையும் புண் படுத்தாத நகைச்சுவையும் உருவகமும் இந்த நிலையை உருவாக்கக் கூடியவை. "நான் அதிகமாகச் சிந்திக்கிறேன். எனவே நான் அதிகமாக உருவகங்களை எழுதுகிறேன்" என்று அரிஸ்டாட்டில் சொல்கிருன். நாட்டுக்குச் சேவை செய்யும் நாகரீகக் கோமாளி என்று தன்மூலம் நகைச்சுவையின் பலத்தை அறிமுகப்படுத்தி ஞர், திரை உலகின் சுயசிந்தனையாளர் கலைவாணர் என். எஸ். கே.

நமது ஆசிரியர் மலை உயரத்தில் சிரிக்கும் வங்க தேசத்து மகுவைப் பூக்களைப் போல உயர்ந்த சிந்தனைகளோடு நகைச்சுவையை உருவாக்குகிறார். "Dramatic irony" மிகச் சிறப்பாகக் கையாளப்படுகிறது. ஒரு வீட்டில் அனைவரும் டெலிவிஷன் பாடல் காட்சியை ரசிப்பதை "எல்லோரும் பெட்டியில் அடங்கிய பணம் போலக் கேட்கிறார்கள்" என எழுதும் ஆசிரியர், உடனே சோசலிசத் திசை வழியில் தனது பார்வைகளைத் திருப்பிவிடுகிறார். "ஒலி புகுந்தது. ஆனால் ஏழைகளின் வாழ்வில் ஒளி புகவில்லை" என்கிறார். தமிழனின் வாழ்வில் முதலில் ஒளி வரட்டும். பிறகு தமிழ்மொழியில் தானே ஒலி வரும். இதுதானே உண்மை?

காதலனோடு ஸ்கூட்டரில் போகிற பெண்ணின் தந்தையான இன்ஸ்பெக்டர் பேசும் பேச்சு அற்புதமான

குறும்புப் பெண்ணின் சொற்களோடு கலந்து சுகம் தரு கிறது. இதோ அந்த உரையாடல்:-

தந்தை : நீ ஸ்கூட்டரில் போனது உண்மைதானே?

மகள் ; ஹெல்மெட் போடவில்லை.

தந்தை : அதை நான் கேட்கவில்லை.

மகள் : இல்லேப்பா அதுக்குத்தானே நீங்கள் சார்ஜ் செய்வீர்கள்!

ராசீ அவர்களின் நகைச்சுவை அழகில் மயங்கியவன் நான்.

"கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது தெரியுமா? அதில் இனிப்பு இல்லை" என்றாராம் ஒரு கவிஞர். இது அவர் குப்பைதொட்டிப் புதுக்கவிகளைச் சாடுகிற லாவகமான பாணி. ஒரு ஓவியனின் இலக்கிய தாகத்தில் எழுந்த கதை இது. 'நனவோட்டம் உத்தி' ஜேம்ஸ் ஜாய்சால்

பயன்படுத்தப்பட்டது, புதுமைப்பித்தனின் கயிற்றரவு என்னும் கதையில் வருகிறது. உணர்வுகளின் ஓட்டம் தலைமை தாங்கும் ஒரு உத்தியால் கதை சொல்வது நனவோட்டம். நாவல் முழுக்க ராசீ தன் முத்திரையைப் பதிக்கிறார். மிக ஆழமாகப் படிக்க வேண்டிய நாவல் இது.

நான் அங்கங்கே சில அழகுகளை மட்டுமே சுட்டிக் காட்டுகிறேன்.——வாசகர்கள் இந்த வித்துக்களைப் பூக்க வைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்!

இளமை என்கிற நாவல் தமிழகத்தில் நடைபெற்ற மாணவர் இந்தி எதிர்ப்புப்போரைக் களமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது.உணர்ச்சிவசப்படாமல் அறிவு பூர்வமாக அணுக வேண்டிய பிரச்சனை இது. "தாய் மொழியை இழப்பது சூரிய அஸ்தமனத்திற்குச் சமமானது" என்று புரட்சித் தலைவன் லெனின் கூறினன். மொழியை வெறும்

கருவி என்று சொல்கின்றவர்கள் ரோஜாத் தோட்டத்தைக் காய்கறிக் கடை என்று சொல்கிற வறட்டு தத்துவவாதிகள்தான். பங்களாதேஷ் தாக்கப்பட்டபோது வங்கக் கலாச்சாரம் அழிகிறது என்று சென்னை கோகலே ஹாலில் குரல் கொடுத்த பூபேஸ்குப்தா ஒரு பொதுவுடமைவாதி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எந்த மொழியையும் தமிழகம் அவமதிக்க விரும்பவில்லை. காதலனைப் பிரிந்த சோகத்தால் வாடும் இந்திப் படத்துக் கதாநாயகி, "என் கண்களில் கண்ணீரின் விதையை விதைத்து விட்டுச் சென்றவன் யார்" என்று பாடுவதை எங்களால் ரசிக்க முடிகிறது. ஆனால் அதே இந்தி மொழி எங்களை இரண்டாம்தரக் குடிமக்களாக்கி எங்கள் கண்களில் கண்ணீரினை விதைக்க முயன்றால் அதை அனுமதிக்க முடியாது. வேலையில்லாத்திண்டாட்டம், வறுமை இவை நடமாடும் போது மொழிப்பிரச்சனை என்பது சமூக வளர்ச்சியில் பின்இணைப்

பாக வரலாமே தவிர திசை திருப்பும் முதலாளித்துவ கருவி யாக மாறிவிடக் கூடாது. ஆனுல் ஏழை மக்கள் நிறைந்த இந்த தேசத்தை ஜாதி, மத, மொழி வெறிகளில் பிளவு படுத்திப் புதிய உருவம் கொள்ளத் துடித்த முதலாளித்து வம் தமிழகத்தைப் பற்றி எரிய வைத்தது. தொல்காப்பி யத்தை எத்தனைபேர் படிக்கிருர்கள் என்பதல்ல இன்றைய பிரச்சனை; தோட்டிகளில் எத்தனைபேர் பசியில்லாமல் உண்கிருர் என்பதுதான். துரதிஷ்டவசமாக மொழிப் போராட்ட நிழல் யுத்தம் 1965-ல் வெடித்தது. மொழியைக் காட்டு தேவதையாக்க நாங்கள் விரும்பவில்லை. ஒழுங் காகச் சட்டை போடுவதால் எவனுக்கும் நோபல் பரிசு வருவதாக இல்லை. ஆனுல் ஒவ்வொருவனும் சட்டையைக் கிழித்துக் கொண்டு அலைந்தால் தேசமே கீழ்பாக்கம் ஆகி விடும். தமிழுக்குரிய சராசரி மரியாதை எவராலும் தரப் பட்டே ஆகவேண்டும் என்று மாணவர் முழக்கம் முழக்

கப்பட்டுக் கொண்டேயிருந்தது. ரத்தத்தாலும் பிணத்தாலும் மரணத்தின் சாம்பலாலும் தமிழகத்தில் தென்றல் காற்று கூட கனத்துப் போயிருந்த நேரம் அது.

''நீங்கள் பிணங்களைத் தின்று கொண்டு உயிர் வாழும் கழுகுகள்!

நாங்கள் பாடிக் கொண்டே சாகும் வானம்பாடிகள்!

என்று இளைய தலைமுறை முழக்கமிட்டது. நானும் சகோதரர் தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் காளிமுத்துவும், தாளமுத்து நடராஜன் கல்லறைகளைப் போல காளிமுத்து, காமராசன் கல்லறைகள் தமிழைக் காட்டும் என்று முழங்கிச் சட்டத்தை எரித்துச் சிறைப் பறவைகளானோம். ஆருயிர் சகோதரர் காளிமுத்து அப்போது அழகாகச் சொன்னார் "காமராசனும், நானும் கன்னித்தமிழ்த்தாய் வடித்த இரண்டு கண்ணீர்த் துளிகள்" என்று. போராட்டம்

வன்முறைக்காரர்களால் வளர்க்கப்பட்டது. பல மாணவர்கள் பிணமானுர்கள். மழைக் காலத்துக் குயிலைப் போன்ற ஊமை மனம், ஓசைக் கல்லறைகளாக மாறிவிட்ட உதடுகள், வார்த்தைகளையே உணவாக்கிக் கொண்ட நாக்கு, எங்கள் புராதன அன்பின் நினைவுச் சின்னமாக விழி வாசலை ஈரமாக்கிக் கொண்டிருந்த வெப்பமுள்ள கண்ணீர்த்துளிகள் இவைகளைக் காணிக்கையாக்கி நாங்கள் அஞ்சலி செலுத்திேனும். மரணத்திற்குப் பிறகு ஊர்வலம் நடைபெறுவதுதான் வாடிக்கை. ஆனுல் எங்கள் சிவகங்கை ராஜேந்திரனுக்கு ஊர்வலத்திற்குப் பிறகு மரணம் வந்தது. தீக்குளித்துச் சின்னச்சாமி செத்த போது அவனுடைய மனைவி குங்குமம் இழந்தாள். ஆனுல் நாங்கள் அந்தத் தியாகியின் சாம்பலை நெற்றியில் பூசிவிடுதலை மதத்தின் வீர சைவர்களாக மாறினேம்!

மாணவர்களின் இடைவிடாத கோரிக்கையால் இருமொழிக் கொள்கையைத் தமிழக அரசு சட்டமாக்கியது.

ராசீ அவர்கள் இந்தச் சூழ்நிலையை மையமாக வைத்து "இளமை" எனும் சமுதாய நாவலைப் படைக்கிருர். "போலீஸ்காரன் மகன் போலீஸாலேயே சுட்டுக் கொல்லப்பட்டான்" என்று அவர் அண்ணுமலை ராஜேந்திரனைப் பற்றி எழுதுகிறபோது இதயம் சிலிர்க்கிறது இந்த நாட்டில் ஒவ்வொரு மனிதனும் ஒரு முறை சிறைக்குச் செல்லவேண்டும். அப்போதுதான் வாழ்வின் முழு அனுபவத்தையும் பெறமுடியும். உண்மைதான்! அங்குள்ள ஒவ்வொரு அறையும் நூலகம், ஒவ்வொரு கைதியும் ஒரு புத்தகம். அவைகளுக்குள்ளே நகைச்சுவை, சோகம், நவரசம்! சுவையான சிந்தனைகள் சிறைச்சாலையில்தான் உருவாக முடியும்.

"நமது நாட்டில் பட்டதாரிகள் சிறைச்சாலையில்தான் மதிக்கப்படுகிருர்கள். ஏனென்ருல் இங்கேதான் அவர்களுக்கு பி–கிளாஸ் கிடைக்கிறது" என்று சிறைச்சாலை என்கிற கட்டுரையில் நான் எழுதியிருந்தேன். பண்டித

நேருவும், தோழர் ஜீவாவும் சிப்பியில் இருந்து வெளிவரும் முத்துக்களைப்போல சிறைச்சாலையிலிருந்து சிந்தனையாளர்களாக வெளிவந்தார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இதைத்தான் நமது நூலாசிரியர் விளக்குகிறார். யாரும் அரசியலை விட்டு ஒதுங்கி ஓடிவிடக்கூடாது. அது ஒரு உரிமைப்போர் என்று கூறுகிறார். இத்தகைய போராட்டங்களுக்கு மாணவர்களை அரசியல்வாதிகள் பயன்படுத்துவதால் நாட்டிற்கு ஏற்படும் சீரழிவுகளையும் ஆசிரியர் சுட்டிக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. பாரதியையும், பாரதிதாசனையும் வைத்துக்கூட கட்சி பிரிக்கிற வியாபாரக் கும்பல் இந்த நாட்டில் இருப்பதை இவர் ஒருவர்தான் சுட்டிக் காட்டியுள்ளார். செயல் திறனை வைத்தே தலைவனைத் தெரிவு செய்ய வேண்டும் என்கிறார். இது மிகவும் வரவேற்கப்படவேண்டிய கருத்து. காந்தியடிகள் ஒரு மகான். ஆனால் லெனின் ஒரு மக்கள்

தலைவர். காந்தியடிகள் குஷ்டரோகிகளைத் தொட்டார். அதனால் அவர் மகாத்மா ஆனார். ஆனால் குஷ்டரோகிகளுக்கு அதனால் என்ன பயன்? அதே நேரத்தில் லெனின் சைபீரியா பாலைவனத்தைப் பார்த்தார். அது சோலைவனமாக மாறியது. இப்போது நமக்குத்தேவை காந்தியடிகளைப் போன்ற மகான்களல்ல லெனினைப் போன்ற தலைவர்களே. ரஷ்ய நாட்டிலே லெனின் செயற்கைக் கடலை உருவாக்கினார் நாம் ராஷ்டிரபதி பவனுக்கு அருகில் அறிவுக்கடல் காந்தி என்று சொல்லிவிட்டு அன்றாடம் தூங்கிக்கொண்டு இருக்கிறோம். இந்தப் பின்னணியில் பார்க்கும்போது செயல் திறமை உள்ளவனே தலைவன் என்னும் ராசியின் சிந்தனை எவ்வளவு பொருத்தமானது என்பது விளங்குகிறது.

எனது கவிதைப்பெண் நகைகூட அணியக்கூடாது. அவளுடைய அழகின் மௌனத்தை அந்த நகைகள் கலைத்து

விடும் என்று கவிகள் சொல்வார்கள். "இளமை" நாவலில் இந்த விமர்சனம் அப்படியே இலக்கியமாகியிருக்கிறது. எழுத்தைப்படிக்கிற கண்கள்—குளத்திற்குச் சனிக்கிழமை நாளில் வருகிற முறைத் தண்ணீரிலே கால்களை நனைக்கும் போது அடையும் குதூகலத்தைப் பெறுகின்றன. வன் முறைச் சம்பவத்தைக்கூட எளிமையான இனிமையோடு விளக்குவது காட்டுப்புறத்திலே, இரவுநேரத்திலே, சில் வண்டு ரீங்காரத்திலே கண்களை மயக்கும் முரட்டுக்கொடி களின் வாசனைப் பூக்களாக வாசகர்களை வார்த்தைகள் மயக்குகின்றன. இந்தி எதிர்ப்பு இயக்கம் என்பது கட்சி எல்லைகளுக்கப்பாற்பட்ட தமிழர் பிரச்சனையாகும். அப் போது ஜனாதிபதிக்குத் தந்தி அடித்தால் மட்டும் தமிழைக் காப்பாற்றி விடலாம் என்று நாடகம் போட்ட தமிழ்ப் பேராசிரியர்கள் உண்டு. ஒரு தமிழ்ப்பேராசிரியர் வெட் கத்தை விட்டுச் சொன்னார் நெஞ்சிலே கைவைக்கிறேன்.

தமிழ்ப்பற்று பொங்கி வழிகிறது. கொஞ்சம் கையைக் கீழே விட்டால் வயிறு இருக்கிறது. பசியும் எடுக்கிறது. இந்த கைய நேரத்தில் புறப்பட்டு, வீரம் இங்கு புறப்பட்டு வந்ததைப்போல் புரட்சிக்குரல் கொடுத்தவர் பேராசிரியர் இலக்குவனுர் ஒருவர்தான். சின்னச்சாமி தீக்குளித்த போதுகூட "விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கென குதித்தல்போல" என்று பாரதிதாசனின் கவிநயம் பாராட்டிய ஆசானகள் உண்டு. ஆனல் ராசீ சாகாத இலக்கியத்தைத் தந்தார். இந்தக் கதைக்குள்ள பெருமை இதுதான்.

தமிழிலே நாவல்கள் என்பவை வெறும் பொழுதுபோக்குச் சாதனங்களாகப் பெரிய எழுத்து விக்கிரமாதித்தர் கதை மாதிரி வெளிவந்துகொண்டிருக்கின்றன. அத்தகைய நாவல்களைப்பற்றி "வீட்டுக்கு விலக்காக இருக்கும் பெண் பிள்ளைகள் படிப்பதற்கு மட்டுமே தகுதியானவை" என்று

ரகுநாதன் விமர்சித்தது கொஞ்சம் கடுமையாக இருந்தாலும் அதுதான் உண்மை.

இதற்குக் காரணம் பிரபல பத்திரிகைகளில் அந்தத் தரத்திற்கு எழுதுவதே இங்கே பொதுவாக இலக்கியம் ஆகிவிடுகிறது. ஒரு பத்திரிகையில் கல்யாணமான பிறகும் ஒரு பெண்—அம்மாவிடம் ஓடும் ரயிலில் பாத்ரூமில் போய் பால் குடித்த மகாத்மியத்தைக் கதை பண்ணியிருந்தார்கள். நமது எழுத்தாளர்கள் எவ்வளவு வெட்கம் கெட்டுப்போய் இலக்கியங்களைப் படைக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவையில்லை என்று கருதுகிறேன்.

துப்பறியும் கதைகளும், ராஜாக்கள் காலத்து முக்கோணக் காதல் கதைகளும் நமது புத்தக நிலையங்களில் பஜ

ளைக் கோவில் சுண்டல் போல "ஸ்டாக்" இருப்பது ஒன்றே நவீனத்தன்மைக்கு நமது இலக்கியங்கள் எவ்வளவு அந்நியமாகிப் போய்விட்டன என்பதை இனம் காட்டுகின்றன.

வேறு மாநிலங்களில் இலக்கியவாதிகள் மதிக்கப்படுகின்றனர்.

கேரளாவில் எழுத்தாளர்களுக்கு 40% ராயல்டி தரப்படுகிறது. ஆனல் நமது தமிழகத்தில் பாரதீய ஞானபீடப் பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கே 15% ராயல்டிதான் தரப்படுகிறது. "எங்க தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது" போன்ற அற்புதமான நாவல்களைப் படைத்த கேரள எழுத்தாளர் வைக்கம் மகமதுபஷீர் "ஒரு பையில் நான் எழுதிய சில புத்தகங்களை எடுத்துச் சென்றால் போதும். போகிற வழியிலேயே அவைகளை விற்று நான் செலவழிப்பேன்" என்று கூறுகிறார். அந்த அளவிற்கு இலக்கியம் கேரளாவில் வெற்றிபெற்றுள்ளது. வயலார் ராமவர்மா

திரைப்படக் கவி. ஆனால் அவன் இறந்ததும் அவனது குடும்பத்திற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்த தோடு ரூ. 6 லட்சம் செலவு செய்து கேரளம் நினைவு மண்ட பத்தைக் கட்டியது. வளரும் எழுத்தாளர்களை (Budding Writers) இனம் கண்டு வரவேற்கும் புதிய விழிப்பு அங்கே இருக்கிறது. "ஏணிப்படிகள்" என்கிற தகழியின் நாவலுக்கு எழுதப்பட்டுள்ள முன்னுரையில் எம். டி. வாசுதேவன் நாயரே சிறந்த நாவலாசிரியர் என்று துணிந்து எழுதுகின் றனர். அத்தகைய போக்குகளை அனுமதிக்கும் இலக்கியப் பக்குவம் அங்கே உள்ளது. "அக்னி சாட்சி" என்கிற லலிதாம்பிகா அத்தர் ஜனத்தின் நாவல் இந்த ஆண்டு கேரள மாநில அரசின் பரிசைப் பெற்றது. அதே நாவல் இவ்வாண்டு மத்திய அரசின் சாகித்ய அகாடமிப் பரிசை யும் பெற்றுள்ளது. அந்த அளவிற்கு அவர்களின் ரசனை தரமானதாக இருக்கிறது. "சுந்தரிகளும் சுந்தரன்மாரும்"

போன்ற சிறந்த நாவல்களைப் படைத்த பெரும் எழுத்தாளர் உருபு, ஓ. விஜயனின் "காலக்கண்டே இதிகாசம்" தான் நாவல்இலக்கியத்தில் நம்பிக்கையூட்டுவதாகக் கூறிப் புதிய அதிர்ச்சியின்மூலம் இலக்கியப் பாதையை விசாலப்படுத்துகிறார்.

வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப பார்க்கும்போது மிகுந்த வேதனை ஏற்படுகிறது.

உருது மொழியில் கிருஷ்ணசத்தர் போன்றோரின் நாவல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அவர் எழுதிய "ஒரு கழுதையின் சுயசரிதம்" போன்ற ஒரு படைப்பு தமிழில் உருவாக எத்தனை ஆண்டுகள் ஆகுமோ?

"அற்பஜீவி" கன்னட நாவலானது தமிழில் மிகப் பெரிய ஆதரவைப் பெற்றது.

முதலில் காண்டேகரின் நாவல்கள் பெற்ற வரவேற்பும், சரத்சந்திரர் காவியங்களின் வெற்றியும், தகழியின் 'செம்மீன்'' படைத்த வரலாறும் நமது தமிழில் தரமான நாவல்கள் இல்லை என்பதையே நமக்கு இடித்துரைக்கின்றன.

பஞ்சாபி இலக்கியம் கூட நானக்சிங்கின் ''வெண் குருதி'' க்குப் பிறகு புதிய திருப்பத்தைப் பெற்றுள்ளது. ஆந்திர நாவல்களும் கிராமியக் குடியானவர்களின் எளிய வாழ்வின் அற்புதச் சித்திரங்களாய் மலர்கின்றன,

அந்தந்த மக்களின் பழக்கவழக்கங்களைப் பிற மாநில எழுத்தாளர்கள் பதிவு செய்கின்றனர். வங்கத்தில் இந்துக்களின் சமூகத்தில் ஏற்பட்ட கடுமையான தேவையற்ற பழக்கவழக்கங்கள் ஏற்பட்டதை ஒட்டி பிரம்மசமாஜம்

எழுந்தது. இத்தகைய சரித்திர ரீதியான மாறுதல்களைச் சரத்சந்திரரன் நாவல்கள் சித்தரிக்கின்றன. குருவாயூர்க் கோவில்...அதையொட்டிய வரலாறுகளை வைத்துமட்டுமே "நூறு பூக்கள் மலரட்டும்" என்ற கேரள நாவல் எழுந்துள்ளது. ஆனால் தமிழில் ஜமீன் ஆட்சிக் கால கட்டத்தில் பல விசித்திரமான சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டன.

அப்போது ஏற்பட்ட சில புரட்சிகர நிகழ்ச்சிகள் நாடோடிப் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எங்கள் பகுதியில் ஒரு ஜமீன்தாரணி...வீரத்தைப் போற்றியவள், ஜமீன்தாரரை விட்டு விட்டு ஒரு மறவனை மணந்து கொண்டு அவனோடு சென்றுவிட்டாளாம்! அவளுடைய கதையை

"நீலப் புடவைக்காரி
நிலக்கோட்டை காமுலம்மாள்
மறவன்மேல் ஆசைவச்சு
மன்னவனைத் துறந்த ராணி"

என்று கிராமங்களில் வழங்கப்படும் ஒரு நாடோடிப் பாடல் விவரிக்கிறது. ஆனால் அத்தகைய கதாபாத்திரங் களை வைத்துப் படைக்கப்பட்ட சமூக நாவல்கள் தமிழில் படைக்கப்படவில்லை. அதே நேரத்தில் "ராஜஸ்தானத்து அந்தப் புரங்கள்" என்ற ராகுலசாங்கிருத்தியாயனின் படைப்பு இந்தப் பின்னணியை விளக்கும் அற்புத சிருஷ் யாக மலர்ந்துள்ளது. ஒரு பத்தாண்டுகட்கு முன்பு திடீ ரென்று நினைத்துக்கொண்டு தமிழில் சுதந்திரப் போராட்ட காலத்தை விவரிக்கும் நாவல்களே இல்லை என்றும் நம் எழுத்தாளர்கள் எழுத ஆரம்பித்த பிறகுதானே "ஆத்மா வின் ராகங்கள், வளைக்கரம்" ஆகிய படைப்புக்கள் நமக் குக் கிடைத்தன. இவ்வுளவு தாமதமாக நமது சுதந் திரத்தைக் கொண்டாடும் இலக்கிய வீரர்கள் நாம்.

வெளிப்படையாக விமர்சனம் செய்தால்... சிறுகதைத் துறையில் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் ஆகியோர்

மிகப் பெரிய வெற்றியைப் பெற்றனர், ஆனால் நாவல் துறையில் அப்படி ஒரு பெரிய எழுத்தாளரை (Major writer) நாம் சுட்டிக்காட்ட முடியவில்லை. தகழி, கேசவ தேவ், உருபு, பொற்றைக்காட் என்றும், எம். டி. வாசு தேவன் நாயர், ஓ. விஜயன், விவேகானந்தன், காக்க நாடன் என்றும் கால கட்டத்திற்கேற்ப ஒரு நாற்பது ஐம்பது நாவலாசிரியர்களை நமது அண்டை மாநிலமான கேரளம் உருவாக்கி இலக்கியத்திற்குத் தலைமை தாங்கு கிறது. ஆனால் நாம் மிகப்பெரிய பள்ளந்தாக்கில் இலக்கிய சேவை செய்கிறோம்.

"மணிக்கொடி" இதழ் ஒரு பெரிய இலக்கியப் புரட்சியை ஏற்படுத்தியது. அந்த யுகத்தில் கூட ஒரு தர மான நாவல் எழவில்லை. சுயமரியாதை இயக்கம் மேடைத் தமிழை வளர்த்தது. அந்த இயக்கம் தந்த நாவல்கள் பல

வீனமான கதைப்போக்கும், சலிப்பூட்டும் நடையும் கொண்டவையே.

பொதுவுடமைத் தத்துவத்தைத் தமிழகம் ஆசையோடு வரவேற்ற காலத்தில் ஜெயகாந்தன் சிறுகதையில் வெற்றி பெற்ருர். நாவல்துறையில் யாரும் வெற்றி பெறவில்லை.

மேலைநாட்டு இலக்கியப்பாணியைப் பின்பற்றிய குழுவினர் கூட "கோணல்கள்" போன்ற சிறுகதைத் தொகுப்பில்தான் பிரமிப்பூட்டக்கூடிய வெற்றியைப் பெற முடிந்தது,

டால்ஸ்டாய்...ஹெமிங்வே, ஜேம்ஸ்ஜாய்ஸ் போன்ற உலக எழுத்தாளர்களொடு ஒப்பிடக் கூடிய நாவலாசிரியர்கள் தமிழில் இதுவரை உருவாகவில்லை. சரத்சந்திரர் போன்ற பிற மாநில எழுத்தாளர் பலர் அந்தத் தரத்தைக்

கொஞ்சம் எட்டித் தொடும் அளவு எழுதியிருப்பதை நாம் மறுக்க முடியாது. இவ்வாண்டு சாகித்ய அகடாமிப் பரிசு பெற்றுள்ள இந்திரா பார்த்தசாரதியின் "குருதிப் புனல்" நாவல் ஒன்றே இலக்கியத் தரத்தோடு பரிசு பெற்றது. இத் தகைய வறட்சியான சூழலில் ராசீயின் நாவல்கள் நமக்கு ஆறுதல் ஊட்டுகின்றன.

இந்தியாவின் பிரசித்தி பெற்ற நாவல்களைப் பற்றி விமர்சிக்கும் மேல்நாட்டு விமரிசகர்கள் குடும்ப உறவு களைச் சித்தரிக்கும் படைப்புகளே இந்தியத் தன்மையைப் பிரதிபலிப்பதாகக் கூறுகின்றனர். 'சரத்சந்திரர் வாழ்ந்த காலத்தில் வங்காளத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் விதவைகள் இருந்தனர். ஒரு குடும்பத்தினரைப் பார்த்து, "இங்கே எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள்?" என்று கேட்பதைப் போல, "இங்கே எத்தனை விதவைகள் இருக்

கிறார்கள்?'' என்று கேட்கவேண்டிய சூழல் இருந்தது. இதைச் சரத்சந்திரரின் "உபாத்தியாயரின் மனைவி" போன்ற நாவல்கள் படம்பிடித்துக்காட்டுகின்றன.

தமிழகக் குடும்ப உறவுகளில் வரதட்சிணைப் பிரச்சினை பெரும்பங்கு வகித்ததை நாம் மறுக்க முடியாது. படிப்பைக் கல்யாணச் சந்தையில் விற்கும் மாணவர்கள் கடைசித் தேர்வு எழுதி முடித்ததும் விடைத்தாளுக்கே மூன்று முடிச்சுபோட ஆரம்பித்து விடுகிறார்கள். அத்தகைய இன்றையபடிப்பின் இதயதாகமான வரதட்சிணைப் பிரச்சினையை ராசீயின் "வழுக்குதிலம்'' எதார்த்தமாகச் சித்தரிக்கிறது. இதுவரை தமிழ் நாவல் இலக்கியத்தில் யாருக்கும் கைவராத "அருவி நடைத் தமிழ்'' இந்த நாவலில் ராசீக்கு மிகச் சிறப்பான இடத்தை அளிக்கிறது. சிவராமன், பார்வதி இவர்களின் வாழ்வில் வரதட்சிணைப்

பிரச்சினை நாடகமாடுவதை நாவல் சித்தரிக்கிறது. பாருவின் அண்ணு, சிவராமனின் தமக்கை———சிவாவின் தோழி சாரதா ஆகிய பாத்திரங்கள் வலம்வந்து பிரச்சினையை முற்றுவித்துக் குமுற வைத்தபிறகு ஒரு முடிவு ஏற்படுகிறது.

சிவராமன் மனைவியைப் பிரிந்து குடியிருக்கிற இடத்தைப் பற்றி எழுதும் போது ஆசிரியரின் வர்ணனைத் தன்மை முதல் தரமாக அமைகிறது. "ரோஜா இதழ்கள்" என்ற நாவலில் ஆரம்பத்தில் கதாநாயகின் பாழடைந்த வீட்டைப்பற்றி ராஜம் கிருஷ்ணன் அவர்கள் வர்ணிக்கும் பாணிக்கு இணையானதாக இவ்விடம் சிறப்புப் பெறுகிறது.

ஆரம்பத்தில் மனைவியை நேசித்த சிவா——ஆடம்பரத்தில் மூழ்குவதை, "முன்னுலெல்லாம் ஆபீசுக்குப்

போவதற்குமுன் பாரு! இங்குவா! என்று கூறி அன்போடு அணைத்துக் கொள்ளும் அவன் கரங்கள் இப்பொழுது "டையை"ச் சரிப்படுத்துவதிலேயே இருந்தன" என்று அழுத்தமாக வர்ணிக்கிருர்.

நமது நாட்டுப் பெண்கள் சூரியனைப் பார்த்தால்கூடக் கற்புக் கெட்டுவிடும் என்கிற அளவிற்கு வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடந்து சோகம் கொள்கிறவர்கள். அதிகமான கனவுகளும், உல்லாசமும் அற்ற அவர்களின் ஒற்றைத்தட வாழ்வில் வீட்டு வேலை என்னும் உழைப்பே அவர்களுக்கு ஆறுதல் ஆகிறது.

"வீடு பெருக்கும் தொழிலாவது கிடைத்ததே" என்று கணவனின் அன்பை இழந்த பாரு வேதனைப்படும் இடத்தில் இந்த வாழ்வியல் உண்மையை ஆசிரியர் விளக்குகிருர்,

நாவலின் இடையிடையே வாழ்க்கை விமர்சனங்கள் இடம் பெறுகின்றன.

"மனிதர்கள் வாழாமல் இருக்கமுடியாது. வாழ்வதற்கு அவ்வப் பொழுது தூண்டுதல்கள் ஏற்பட்டுக்கொண்டு இருக்கின்றன. வயதுக்கும், காலத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற தூண்டுதல்கள் உண்டாகிக் கொண்டுதான் இருக்கின்றன" என்பதைப் போன்ற சிந்தனைகள் பிரமிப்பூட்டுகின்றன.

"சன்னல் அருகில் உட்கார்ந்தாள். கம்பிகளுக்கு வெளியே உலகம் இருந்தது. அங்கே சிட்டுக் குருவியொன்று சுற்றிச் சுற்றி, தன்னிச்சை போலப் பறந்து சென்றது. வண்ணக்கிளியொன்று தன் இணையோடு வட்டமிட்டது. ஆனால் இந்த மனித இனத்தின் வேகம் தான் மெல்ல அசைவதுபோல அவளுக்குத் தோன்றியது."

பனித்துளிச் சிந்தும் மாலைக் காலம் முத்துக்களைப் பரிசளிப் பதைப் போல எளிய நடையில் ஆழமான உண்மைகளை விளக்குகிறார்.

"மாமனார் சொத்தை எதிர்பார்ப்பதுதான் மாணவர்கள் படிப்பு முடிந்ததும், உலகத்தைப் பார்த்துக் கற்றுக் கொள்ளும் முதல் பொருளாதாரப் பாடமாக இருக்கிறது" என்ற வரிகள் எதார்த்தமான உண்மைகளைத் தோலுரித் துக் காட்டுகின்றன. செல்லத்தட்டு தட்டுவதைப் போல போகிற போக்கில் நளினமாக இந்தச் சமூகத்தைச் சீண்டுவது' ராசீக்கு கைவந்த கலையாகத் தெரிகிறது.

வரிசையாக இருந்த வெள்ளிக் குவளைகளில் இரண்டை சிவா எடுப்பது சிரித்துக் கொண்டிருந்த பற்களில் இரண்டைப் பிடுங்கித் தனியே வைப்பதைப் போல இருந்ததாம். ஜெயகாந்தனின்

"யாருக்காக அழுதான்?" நாவலில் காபி ஆற்றப் படுவது வட்டகைக்கும்...டம்ளருக்கும் பாலம் போட்ட மாதிரி என்று வரட்சியாக வர்ணிக்கப்படுகிறது. ஆனால் ராசீ தட்டுமுட்டுச் சாமான்களைப் பற்றி எழுதினாலும் அங்கே தமிழ்த் தென்றல் வீசுகிறது.

"இளமை" நாவலைப் போலவே "வழுக்கு நிலம்" நடை அழகிலும், நிகழ்ச்சிகளின் சித்தரிப்பிலும் முதலிடம் பெறுகிறது. வரதட்சணையை இரண்டு மணிநேரம் ஜோக் புத்தகம் வாசித்துக் காட்டுவதுபோல் சிரிப்பொலிகளுக் கிடையே நடிக்கப்படும் சபா நாடகங்களிலும், நாவல் களில் வரும் நவரசங்களில் ஒன்ருகவும் எழுதி வந்த தமிழகத்தில்...இயற்கையாக அப்பிரச்சினை எப்படிக் குடும்ப உறவுகளைப் பாதிக்கிறது என்பதை "வழுக்கு நிலம்" அழுத்தமாக எடுத்துக்காட்டுகிறது.

* * *

டி. எஸ். எலியட்டின் "Waste Land"...ஐப் போல "வெறுந்தாள்" என்கிற தலைப்பே கம்பீரம் பெறுகிறது.

இலக்கிய விமர்சனம் செய்யும் நண்பர் கூட்டத்தின் இடையே நடைபெறும் நிகழ்ச்சிகளையே கதையாக்கி மிகச் சிறிய அளவில் வலுவான நோக்கத்தோடு எழுதப் பட்டுள்ள நாவல் இது.

சரஸ்வதியின் பாத்திரப் படைப்பு மறக்க முடியாத ஒன்று. அதே போல எனது ரியாலிசம் என்று பத்திரிகை ஆசிரியன் குறிப்படும் மனைவியின் குணவார்ப்புகள் ரசிக்கத் தக்கவை. மிகப் பெரிய இலட்சியத்தோடு வாழ்வில் அடியெடுத்து வைக்கும் சரஸ்வதி வாழ்வில் சரிகிறாள். ஏழைகளைப் பாடும் கவிஞன் வானம்பாடியும் கீழே வீழ்கிறான். ஆனால் சாதாரணமாக அறிமுகப்படுத்தப்படும் பத்திரிகை ஆசிரியனின் மனைவி நாவலில் மேலே...மேலே உயர்ந்து செல்கிறாள்.

நாவல் முழுவதும் வீணடிக்கப்படாத வார்த்தைகள் சிந்திக் கிடக்கின்றன.

விதவையான சரஸ்வதி ஒரு டாக்டரை மறுமணம் செய்துகொள்கிருள். அதற்கு அவள், "அது அவசியம் என்று பட்டது. பல இளைஞர்களைப் பாழ்படுத்துவதைவிட ஓர் இளைஞனை அழிப்பது நல்லதுதானே" என்று கூறும் சமாதானம் ஆசிரியரின் "Dramatic irony"...யின் ஆழத்தைக் காட்டுகிறது. நூல் முழுக்க இத்தகைய நடையழகைக் கையாண்டு தமிழில் ஒரு புதிய சாதனையை உருவாக்குகிருர் ராசீ.

பசியைப் பற்றி வயிற்றுப்பசி, காதல்பசி, தெய்வீகப் பசி என இனம் பிரித்துவிட்டு அதற்கும் மேலே "அறிவுப் பசி" இருப்பதாகக் கூறும் இடம் புதிய சிந்தனைப் போக்காக அமைகிறது.

புதுக் கவிதை இன்று கடுமையான விவாதப் பொருளாகிவிட்டது. அதைக்கூட ராசீ நாவலில் காட்டுகிறார்.

"நீங்கள் புதுக் கவிதையைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?"

"புது மாப்பிள்ளையைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" இதைப் போல இன்றைய சமூகத்தில் ஊடாடும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் ஆழமாக விமர்சிக்கிறார். பிரச்சனைகளை வரிசைாக உருவாக்கிவிட்டு ஒவ்வொன்றிற்கும் தீர்வு சொல்கிறார்.

இந்தச் சமூகத்தில் ஒவ்வொன்றையும் பொருளாதார அடிப்படையிலேயே மதிப்பிடுகிறார்கள். இந்த நாவலில் வரும் டாக்டர் தனது நோயாளிகளைப் பற்றிச் சொல்லும் போதுகூட "கேசு காம்பிளிகேஷன் ஆனால் பீசு பிரமாதம்" எனப் பொருளாதார ரீதியில் பேசுகிறார். எனது உறவினர் ஒருவர் தம் நண்பரை அறிமுகப்படுத்திய போது "இவர்

எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர். தினமும் இரண்டு சுவீட்டு வாங்கித் தருவார்'' எனக் கூறியது என் நினைவிற்கு வருகிறது.

''என் மனைவி... அதாவது என்னை எந்தக் கற்பனைக்கும் செல்லாதபடி தடுக்கும் ரியாலிசம்'' இதைவிட இன்றைய இந்தியக் குடும்ப மனைவியை எந்த நாவலாசிரியனுவது வர்ணிக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.

''விதவைத்தனம் என்பது ஒரு பாதிப்பே தவிர... அது அவளிடத்தில் ஏற்படுகிற பருவ மாறுதல் அல்ல'' என்கிற இடத்தில் புதுக் கவிதை நயம் நாவலில் ஆக்ரமித்துக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. சரஸ்வதி வீட்டிற்குச் சென்றுவிட்டு வந்து மனைவியிடம் பொய் சொல்லும் எழுத்தாளன்,

''நான் சரசுவதி கோயிலில் இலக்கிய விமர்சனம் செய்து கொண்டிருந்தேன் என்ருல் அந்த வழிபாட்டை

அவள் எப்படி ஏற்றுக்கொள்வாள்" என்று தன்னிலை விளக்கம் தரும் இடம் சுவையாக இருக்கிறது.

தமிழ்ப் பத்திரிகைகள் எப்படி இலக்கியத்தை வளர்க்கின்றன? இதோ வெறுந்தாள் பதில் சொல்கிறது:—

"தமிழ்க்கதை என்ருல் அதில் காதல் முக்கியமான இடம் பெறவேண்டும் என்பது மேனேஜர் உத்தரவு."

நமது சமூகம் இளைஞர்களை எவ்வளவு புறக்கணித்து வைத்திருக்கிறது என்பதை.

"இளைஞர்களைச் சமூக சேவை செய்ய அனுப்புகிருர்கள். முதலில் அவர்களுக்குச் சேவை செய்ய இந்தச் சமூகம் முன்வரட்டும்" என்ற வரிகள் விளக்குகின்றன.

சரசுவதி ஆசை, அன்பு, பாசம் என்ற மூன்று நிலைகளில் போராடுகிருள். பாசம் அவளுக்குக் கிடைக்கவில்லை. இதை ஆசிரியர் "மூன்ருவது படியில்தான் வித்தி

யாசம் ஏற்படுகிறது. தன் பாசம் எங்கேயோ சென்று விட்டது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது.'' என்று நாவலின் 41-ம் பக்கத்தில் சுட்டிக் காட்டுகிறார். ஆக, அவளது வீழ்ச்சியின் தொடக்கம் அங்கேயே உருவாகி விடுகிறது. பாசம் காட்ட ஒரு குழந்தை பிறந்ததும் பின்னாலே அவள் இலக்கியத்தை மறந்துவிடுகிறாள்.

மக்கள் தொகைப் பெருக்கத்தை ஓரிடத்தில் ஆசிரியர், ''நாம் அவசரப்படுவதில்லை. குழந்தைகள் அவசரப்பட்டு விடுகின்றன'' என்று கவிதை அழகோடு சுட்டிக் காட்டுகிறார். இவ்வாறு பல்வேறு விதமான சிந்தனைப் பொறிகள் நூலெங்கும் சிதறிக் கிடக்கின்றன.

கடைசியில் பத்திரிகை ஆசிரியர் நண்பர்கள் வழி மாறிச் சென்ற பின்னும் இலக்கியத்தில் எழுதுவதைச் செயலாக்கும் வாழ்க்கை வாழ உறுதி கொள்வது நாவலின் தரத்தை உயர்த்துகிறது.

ராசீயின் நாவல்கள் எனக்குள்ளே புதிய உலகங்களைப் படைக்கின்றன.

இரட்டை ஆட்சிமுறையை பிரிட்டிஷார் அமுல் நடத்தியபோது எதிர்த்த நாட்டில் இருதாரம் மணமுறை அனுமதிக்கப்பட்டது. "வழுக்கு நிலம்" என்று பெயர் வைத்துக் கொண்டு ரத்த பின்னம் போன்று சிறிய காயம்.கூட இன்றி இலக்கியப் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபடுகிறார் ராசீ.

"வெறுந்தாள்" காவியம் ஆகிறது. "நனவோட்டங்கள்" ஒரு தவமாகக் கனிகிறது. "இளமை" சாகாவரம் பெறுகிறது. 'அரைமனிதன்' இதய உலகத்தில் குடியேறுகிறான்.

அவருடைய நாவல்களைச் "சாகாவரம்" என்ற தலைப்பிலேயே விமர்சித்திருக்க வேண்டும் என்கிற நினைவோடு வீட்டிற்கு வருகிறேன்.

கிராமீய ராப்பாடிகளின் சோகத்தை வெளியிடும் சாரதாவின் கடிதம்——வரதட்சிணையைத் தலைநகர

மாக்கிக் கொண்ட சிவராமன்——அவனது சாம்ராஜ்யத்தில் குங்குமமாய்ப் புகுந்து பூவாகத் தளும்பிய பார்வதி——— இரக்கத்திற்குரிய அம்மாக்கண்ணு——இலட்சியக் கனவு காணும் ஓவியர்———ஒரு பலமாக நிமிர்ந்து பலவீன மாய்ச் சரிகிற சரஸ்வதி——எல்லோரும் இதயவானத்தில் எண்ணப் பறவைகளாய்ச் சிறகடிப்பது மனக்கண்ணில் தெரிகிறது.

எங்கள் வீட்டு பால்கணி முற்றத்தில் பதியனிட்ட ரோஜாச் செடியில் முதல் மலர் பூத்திருந்தது. நான் எனது ஞாயிற்றுக்கிழமைத் தோழி (வீட்டுக்காரி)யைப் பார்த்து "ரோஜாச்செடி கொண்டை போட்டிருக்கிறதா?" என்று கேட்டேன். அவள் உடல்பெருத்த திராட்சைக்கனியைப் போன்ற பெரிய "நாவல் பழம்" ஒன்றை எனது இடது உள்ளங்கையில் பரிசாக வைத்துவிட்டுச் சிரித்துக் கொண் டிருந்தாள்!